காப்பர் இருக்கிறது. இவற்றை இவ்வளவு நாட்கள் எதற்காக காத்து வைத்துக் கொண்டிருக்க வேண்டும்? அரசிலிருந்து உடனடியாக இதை விற்பனை செய்யக் கூடாதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: டிரான்ஸ்பார்மர்கள் பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. செப்பு கன்டன்ஸர்கள் அதாவது கடத்திகள் பற்றிய விவரம் தான் கேள்வி, அதற்கான பதிலும் சொல்லப்பட்டிருக்கிறது. மற்றபடி இருக்கின்ற டிரான்ஸ்பார்மர்கள் 'ஸிக்'காக இருக்கிறதா அல்லது பயன்படுத்தப்பட்டு வருகிறதா என்கின்ற விவரங்களை ஆராய்ந்து தான் முடிவு எடுக்க வேண்டும்.

நிலவள வங்கிகள்.

*வினா 3.—திரு. கே. சௌந்தரராசன்: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்: கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செந்துறை, ஆண்டிமடம், அரியலூர் ஆகிய இடங்களில் தனித் தனியே மூன்று நிலவள வங்கிகள் அமைக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: இல்லை.

திரு. கே. சௌந்தரராசன்: தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் உடையார்பாளையம் ஒன்றியம் ஒன்றாக இருந்த நேரத்தில் நான்கு ஒன்றியங்களைச் சேர்த்து ஒரே இடத்தில் நிலவள வங்கி அமைக்கப்பட்டு இருந்தது. இப்போது ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் தனித் தனியாக ஏற்பட்டிருப்பதால், அந்தந்த ஒன்றிய வங்கியில் தான் கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அதே நேரத்தில் முன்பு இருந்த வங்கியில் ஏதாவது தவணைக் கடன் பாக்கியிருந்தால் இப்போது கடன் பெற முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே நிலவள வங்கிகள் செயல்படுகின்ற நேரத்தில் விவசாயிகள் நல்ல முறையில் பயன்பெறுகின்ற முறையில் நிலவள வங்கிகள் அமைக்கப்படுமா, அதற்காக உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-10]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலவள வங்கி அமைப்பதிலே இந்திய ரிசர்வ் வங்கியின் சில வரையறைகளை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படுகிறது. அந்த வகையிலே இந்த அரியலூர் வட்டத்திலும், ஆண்டிமடம், செந்துறை வட்டங்கள்,

1978 ஆகஸ்ட் 31]

ஆக இந்த மூன்று வட்டங்களிலும் தற்போது ஏறத்தாழ 47 லட்சம் ரூபாய்களைக் கொண்ட வரவு செலவு செய்கின்ற நிலைமை இருக்கின்றது. அந்த வகையில் பார்க்கின்றபோது, தனித்து ஒரு நிலவள வங்கியை ஆண்டிமடம், செந்துறை ஆகிய பகுதி களுக்கு உருவாக்குவதற்கு வாய்ப்புகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கேள்வி செந்துறை, ஆண்டிமடம், அரியலூர் பற்றிய கேள்வி. துணைக் கேள்வியை அதை ஒட்டிக் கேட்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: இந்த செந்துறை, ஆண்டிமடம் போன்ற பகுதிகளில் ஒரு சில விவசாயிகள் இந்த நில வள வங்கியிலே கடன் வாங்கி இருக்கிறார்கள். கடன் வாங்காத உறுப் பினர்களும் உண்டு. கடன் வாங்கியவர்கள் முறையாக திரும்பச் செலுத்தவில்லை என்பதற்காக, கடன் வாங்காதவர்கள் பாதிக்கப் படுகிறார்கள். அதற்கு நிவாரணம் என்ன என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் மீண்டும் இந்தக் கேள்வியை தயவு செய்து சொல்லுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: இந்த செந்துறை, ஆண்டிமடம் பகுதியிலே உள்ள விவசாயிகள் ஒரு சிலர் மட்டும் இந்த வங்கி யிலே கடன் வாங்கியிருக்கிறார்கள். சிலர் கடன் வாங்காத நிலைமையிலும் இருக்கின்றார்கள். கடன் வாங்கியவர்கள் திருப்பிச் செலுத்தவில்லை என்பதற்காக, வாங்காதவர்கள் பாதிக்கப் படுகிறார்கள். இவர்களுக்கு என்ன நிவாரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிலவள வங்கியிலே ஒரு குறிப்பிட்ட நிலுவை இருந்தால், மற்றவர்களுக்குக் கடன் கொடுக்கக் கூடாது என்ற ஒரு விதி இருகின்ற காரணத்தினால், கடன் வாங்காத மற்ற உறுப்பினர்களுக்கும் இந்த வாய்ப்பு மறுத் தளிக்கப்படுகின்றது.

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, இந்த வங்கிகளிலே வரவு செலவு பார்க்கின்ற ஜெனரல் பாடி கூட்டங்களிலே டிபன் வாங்கிக் கொடுத்து, கணக்கு எழுதும் பழக்கம் இருக் கின்றது. அந்தப் பழக்கம் நிறுத்தப்படுமா ? அப்படி டிபன் வாங்கிக் கொடுத்தவர்களின் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடுமாறு உறுப் பினர் அவர்களை விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

[1978 ஆகஸ்ட் 31

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஏற்கனவே திரு. சிவசாமி அவர்களுக்குச் சொல்லிவிட்டுத்தான் குரல் கொடுத்தேன். பொதுவாக கேள்விகள் கேட்காமல், இந்த மூன்று இடங்களிலே உள்ள வங்கியைப் பற்றிய கேள்விகள் கேட்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. சௌந்தரராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பகுதியிலே 47 லட்சம் ரூபாய் நிலவள வங்கி மூலமாகக் கடன் திருப்பிக் கொடுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். ஆனால், இந்த நிலவள வங்கி அரியலூரில் இருக்கின்ற காரணத்தினால், அரியலூர் ஒன்றியத்திலே ஏற்கனவே தலைவர்கள் இருந்த காரணத்தினால், அங்கிருந்தவர்களுக்கு மட்டும் கடன் கொடுக்கப்பட்டு, அதைத் திருப்பிச் செலுத்த முடியாத சூழ்நிலையில், இன்றைய தினம் மற்றப் பகுதிகளிலே அதாவது ஆண்டிமடம், செந்துறையிலுள்ள விவசாயிகள் கடன் பெற முடியாத நிலைமை உருவாகியிருக்கிறது. அந்த விவசாயிகளும் கடன் பெறக் கூடிய வகையில், கடனைப் பெற்றவர்கள் திருப்பிக் கொடுத்தால்தான் கடன் கொடுக்க முடியும் என்ற நிலைமை இல்லாமல், ஒரு தனிப்பட்ட நிலவள வங்கி அங்கு செயல்பட முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்திய ரிசர்வ் வங்கியின் விதிப்படி 35 லட்சம் கடன் நிலுவை இருந்தால்தான் ஒரு சங்கம் என்ற அடிப்படையில்தான் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல், ஆண்டிமடத்தில் 10,50,000 ரூபாயும், செந்துறையில் 13,82,000 ரூபாயும் நிலுவை இருக்கின்ற காரணத்தினால், இந்த விதி முறை சரியாக வராத காரணத்தினால், இந்த அரியலூர் வட்டத்திலே இணைக்கப்பட்டு, இந்தக் காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது ஒரு வங்கியில் குறிப்பிட்ட அளவு பாக்கி இருந்தால் அந்த வங்கிக்குத் திரும்பக் கடன் கொடுக்க முடியாது என்று சொன்னார்கள். இப்போது அவ்வாறு குறிப்பிட்ட அளவு பாக்கி இருக்கக் காரணம் 20 ஆண்டு 15 ஆண்டு தவணையை ஏழு ஆண்டு தவணை என்று சொல்லியதன் காரணமாகக் கடன் வாங்கியவன் கட்ட முடியாத அளவுக்கு தவணை பாக்கிகள் அதிகமாக ஏற்பட்டதன் காரணமாக ஒழுங்காக எல்லா வங்கிகளும் கட்ட முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நீண்டகாலக் கடனை 15 ஆண்டுகள், 20 ஆண்டுகள் என்று தவணைகளை மாற்றியமைத்தால் கடனைத் திருப்பிக் கட்டுவது சுலபமாக இருக்கும், கடன் கொடுப்பது எளிதாக இருக்கும். இது பற்றி அரசு ஆலோசித்து தகுந்த நடவடிக்கை எடுக்குமா ?

[1978 ஆகஸ்ட் 31]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினர் சொன்ன நல்ல யோசனைகளைப் பரிசீலனை செய்து அரசு ஆவன உடனடியாகச் செய்யும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : ஏற்கனவே நிலவள வங்கிகள் தாலுகாவுக்கு ஒன்று வீதம் செயல்பட்டு வந்தன. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் போது ஊராட்சி ஒன்றிய அளவில் ஒரு நிலவள வங்கி ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஏற்படுத்த வேண்டுமென்று திட்டமிடப்பட்டு அந்த அடிப்படையில் இன்னும் பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களில் நிலவள வங்கிகள் ஏற்படுத்தப்படாமல் இருக்கின்றன. அந்த அடிப்படையில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு நிலவள வங்கியை ஆரம்பிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : நான் ஏற்கனவே தெளிவாகச் சொன்னேன். இன்றைக்குச் சில விதிமுறைகள் இருக்கின்றன. குறிப்பாக இரண்டு விதி முறைகள் இருக்கின்றன. மத்திய அரசு, மாநில அரசு, விவசாய மறு நிதி அபிவிருத்திக் கழகம் உலக வங்கியுடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தின்படி மாநிலத்தின் எந்த ஒரு பகுதியிலும் விவசாய அபிவிருத்திக் கழகத்தின் முன் அனுமதியின்றி புதிய வங்கிகளை ஏற்படுத்தக் கூடாது. இதன்படி தற்போதைய நிலையில் புதிய வங்கிகளை ஏற்படுத்த வேண்டுமானால் இந்தப் புதிய விதிமுறையைக் கடைப் பிடித்தாக வேண்டும். இரண்டாவது, தற்போது நிலவள வங்கிகளைத் தனித்து இயங்கும் துறையின் அடிப்படையில் மாற்றியமைக்க அரசு உத்தேசித்திருக்கும் காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யோசனை பரிசீலிக்கப்படும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இராமநாதபுரம் மாவட்டத்தில் நில அளவை.

*வினா 4— திரு. செ. சிவசாமி :— மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) முகவை மாவட்டத்தில் 1975–76-ல் புதிய சர்வே நடத்தப்போவதாக ஸ்தலம் ஒன்றுக்கு ரூ. 12 வீதம் வசூல் செய்யப்பட்டது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், வசூலான தொகை விபரம் என்ன ?

(இ) இத் திட்டம் அமுல் நடத்தப் படாததற்கான காரணம் என்ன ?